மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள், திங்கட்கிழமை,
இ.ம.எண்.142/2024
இன்
அ.வ.எண்.46/2020
––––

1) குருவம்மாள்
2) சுப்புலட்சுமி
3) சுந்தர்ராஜ்
4) சின்னசாமி
5) மாரிமுத்து ...மனுதார்கள்/வாதிகள்

/எதிர்/

1) பொன்னம்மாள்
2) பொன்முருகலட்சுமி ...எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 12.01.2026 அன்று என்முன்பு இறுதிவிசாரணைக்கு வரப்பெற்று மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கதிர்வேல் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தை கேட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு</u>

**1)** மனுதார்கள்/வாதிகளிடம் உள்ள அசல் ஆவணத்திலுள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்து நிரூபிக்க பவர் மற்றும் பணப்பற்று ரசீது அசல் ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு ஆர்டர் 11 ரூல் 16 மற்றும் பிரிவு 151 சி.பி.சி– படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்–</u>**

மனுதாரர்கள்/வாதிகள் வெள்ளப்பனேரி கிராமத்தில் தாய் தந்தையருடன் வாழ்ந்து வந்து, பின்னர் 1992ம் ஆண்டு ஜாதி கலவரத்தில் வெள்ளப்பனேரி கிராமத்திலிருந்து தெற்கு திட்டங்குளம் கிராமத்தில் வந்து குடியேறி தற்போது

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.02.02 16:47:39 +0530

வரை தெற்குதிட்டங்குளம் கிராமத்தில் வாழ்ந்து வருகிறார். 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்யக்கோரியும், தபசில் சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை இடைஞ்சல்கள் செய்யக்கூடாது என்றும், 1, 2 பிரதிவாதிகள் மோசடியாக உற்பத்தி செய்துள்ள பவர் பத்திரம் மற்றும் கிரைய ஆவண எண்கள்.39/1997, 2723/2008 ஆகிய ஆவணங்கள் தபசில் சொத்தை பொறுத்து செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 01.10.1997 ல் விளாத்திகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 3 புஸ்தகம் 39/1997 நம்பராக பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் மற்றும் பணப்பற்று ரசீது 3 ம்வாதியின் தகப்பனார் எழுதிக்கொடுத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொண்டதாகவும் சொல்லியுள்ளை மனுதாரர்கள் கடுமையாக ஆட்சேபணை செய்கிறோம் என்றும், மேற்படி ஆவணங்களில் தனது தந்தை கையெழுத்து செய்திருக்க வாய்ப்பில்லை என்றும், அந்த ஆவணங்கள் போலியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றும், அதனால் பவர் மற்றும் பணப்பற்று ரசீது அசல் ஆவணங்களை நீதிமன்றத்தின் மூலம் மனுதாரர்களிடம் உள்ள ஆவணத்தில் இருக்கும் கையெழுத்துடன் ஒப்பீடு செய்து நிரூபிக்க மனு தாக்கல் செய்ய உள்ளோம் என்றும், ஆகவே பவர் மற்றும் பணப்பற்று ரசீது அசல் ஆவணங்களை பிரதிவாதிகள் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

1 ம்எதிர்மனுதாரர், 2 ம்எதிர்மனுதாரருக்காகவும் சேர்த்து இந்த அபிடவிட் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தாவாப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்களை ஒப்பீடு செய்ய வேண்டும் என்றால் அதற்கு முன்பாக Admitted Signature அடங்கிய

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.02.02 16:47:48 +0530

ஆவணங்களை மனுதாரர்கள் முதலில் தாக்கல் செய்ய வேண்டும். ஆனால் மனுதாரர்கள் அவரது தந்தையின் கையெழுத்து அடங்கிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், எந்த ஆவணங்களோடு ஒப்பீடு செய்ய வேண்டும் என்று ஆவணத்தின் விவரங்களையும் அபிடவிட்டில் சொல்லவில்லை என்றும், அசல் வழக்கானது 2020ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்து, அதிலிருந்து சுமார் 3 வருடங்களுக்கு மேல் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு தற்போது விசாரணைக்கு பட்டியலிடப்போகும் நிலையில் காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், தாவாப்படும் பவர் ஆவணம் பற்றி வழக்கிற்கு முன்னரே வாதிகளுக்கு தெரிய வந்த நிலையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மனுதாரரின் தந்தையின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து மற்றும் கைரேகை அடங்கிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் குறிப்பாக மனுதாரின் தந்தை கடந்த 17.12.1990ம் தேதியில் கோவில்பட்டி கூட்டுறவு வங்கி லிட் TK 53க்கு எழுதிக்கொடுத்துள் பதிவு அடமான ஆவணத்தை தாக்கல் செய்தால் மனுதாரர்கள் கோரும் ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக இருப்பதாகவும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>4) மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை–</u>**

இம்மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

**<u>5) நீதிமன்ற பரிசீலனை–</u>**

**5(1)** மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கில் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாதென விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மோசடியாக உற்பத்தி செய்துள்ள பவர் பத்திரம் மற்றும் கிரைய

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.02.02 16:47:55 +0530

ஆவண எண்கள்.39/1997, 2723/2008 ஆகிய ஆவணங்களை இல்லா நிலையது என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள பவர் பத்திரம் 3ம் புஸ்தகம் 39/1997 மற்றும் பணப்பற்று ரசீது மனுதாரரின் தகப்பனார் எழுதிக்கொடுத்துள்ளதாகவும் அதன் மூலம் கிரையம் செய்து கொண்டதாக சொல்வதை ஆட்சேபித்து மேற்படி ஆவணங்களில் மனுதாரரின் தந்தை கையெழுத்து செய்திருக்க வாய்ப்பில்லை என்றும், மேற்படி ஆவணங்களுடன் மனுதாரர்களிடம் உள்ள ஆவணத்தில் உள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்து நிரூபிக்க மனு தாக்கல் செய்ய உள்ளோம் என்றும், எதிர்மனுதாரர்கள் கைவசம் உள்ள பவர் ஆவணம் மற்றும் பணப்பற்று ரசீதினை தாக்கல் செய்ய இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**5(2)** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கவுண்டரில் மனு சங்கதிகளை மறுத்துரைத்து மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் அவரது தந்தையின் எந்த ஆவணத்தில் கண்டுள்ள ஆவணங்களுடன் ஒப்பீடு செய்ய உள்ளார் என்பதை ஆவண விவரங்களை குறிப்பிடாமல் இம்மனுவினை நல்லெண்ணத்தின் பேரில் தாக்கல் செய்யாததால் 20.09.2020ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து 3 வருடங்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டு தற்போது வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்போகும் நிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரரின் தந்தையின் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து மற்றும் கைரேகை அடங்கிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் குறிப்பாக மனுதாரின் தந்தை கடந்த 17.12.1990ம் தேதியில் கோவில்பட்டி கூட்டுறவு வங்கி லிட் TK 53க்கு எழுதிக்கொடுத்துள்ள பதிவு அடமான ஆவணத்தை தாக்கல் செய்தால் எதிர்மனுதாரர்கள், மனுதாரர்கள் கோரும் ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளோம் என்றும் தாக்கல் செய்துள்ளார்.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.02.02 16:48:03 +0530

**5(3)** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள்/வாதிகள் எந்த எந்த ஆவணங்களில் கண்டுள்ள அவரது தந்தையின் கையொப்பம் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பத்துடன் கையெழுத்து நிபுணருக்கு எதிர்மனுதாரர்கள் கைவசம் உள்ள பவர் ஆவணம் 39/1997 மற்றும் பணப்பற்று ரசீதுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும் என்று எந்தவொரு விவரமும் அபிடவிட்டில் குறிப்பிடாமல் எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களால் வழக்குரையில் ஒப்புக்கொண்ட 17.12.1990 தேதிய கோவில்பட்டி கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி லிமிடெட் TK ஆவணம் எண்.1088/1990 அடமான கடன் பெற்றுள்ளார். பின்னர் மனுதாரரின் தந்தை 22.04.2023 ல் இறந்துபோய்விட்டார். வங்கி கடனை 2 முதல் 4 மனுதாரர்கள் அடமான தொகை செலுத்தி 15.07.2016 ல் ஆவண எண்.2406/2016 ல் செல்லடித்துவிட்டதாகவும், ஆனால் மேற்படி வங்கி தபசில் சொத்துக்குரிய அசல் ஆவணங்கள் மற்றும் அடமான கடன் தொகை நிலுவையில்லா சான்று கடந்த 07.11.2018 ல் வாதிகளுக்கு கொடுத்தது என்று ஒப்புக்கொண்டதால் எதிர்மனுதாரர்கள், மனுதாரர்கள்/வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட மனுதாரர்களின் தந்தை அடமானம் வைத்த ஆவணத்தை தாக்கல் செய்யும்பட்சத்தில் மனுதாரர்கள் மனுவில் கோரும் ஆவணத்தை எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளதாக எதிருரை தாக்கல் செய்த பின்னரும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரையில் ஒப்புக்கொண்ட அடமான ஆவண எண்.1088/1990 ம் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் எதிர்மனுதாரர்கள் கைவசம் உள்ள ஆவணத்தை மட்டும் தாக்கல் செய்ய கோருவதும் மனுதாரர்கள் வழக்குரையிலேயே அசல் ஆவணங்கள் மற்றும் அடமான கடன் ஆவணம் நிலுவையில்லா சான்றை 07.11.2018 ல் மனுதாரர்களுக்கு கொடுத்தது என்று ஒப்புக்கொண்டுள்ளதால் மனுதாரர்கள் ஒப்புக்கொண்டு கைவசம் உள்ள

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.02.02 16:48:10 +0530

ஆவணத்தை தாக்கல் செய்யாமல் கையெழுத்து நிபுணருக்கு ஒப்பு நோக்குவதற்கு எதிர்மனுதாரர்களிடம் உள்ள ஆவணத்தை மட்டும் கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் சட்டப்படி சுத்தகரம் இன்றி நீதிமன்றத்தை அணுகாமல் காலதாமதப்படுத்த வேண்டி இம்மனுவை தாக்கல் செய்திருப்பதால் மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் தள்ளுபடி செய்வது தான் உகந்தது என்று முடிவு செய்து மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**6) இறுதியாக,** மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 02.02.2026 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.02.02 16:48:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள்–இல்லை.
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள்– இல்லை.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.02.02 16:48:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மா.உ.நீ., கோவில்பட்டி.
இ.ம.எண்.142/2024
இன்
அ.வ.எண்.46/2020
வரைவு/நேரிய/ உத்தரவு
நாள்– 02.02.2026